## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – இன்று

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் **“தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்” இன்று** (20.01.2026 - செவ்வாய்க்கிழமை) மாலை 6.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் : 2026 சட்டப்பேரவைத் தேர்தல்**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18



**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



அ.தி.மு.க. ஓ.பி.எஸ். அணியில் மாநில அமைப்புச் செயலாளரும் தமிழக காங்கிரஸின் மாநில துணைத்தலைவராகவும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினராகவும் எம்.எல்.சி.யாகவும் இருந்த வெங்கடாசலத் தேவர் அவர்களது பேரனும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி. வி. ராஜேந்திரன் அவர்களது அண்ணன் மகனும் வேதாரண்யம் முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர் பி.வி. குழந்தைவேலு அவர்களது மகனுமாகிய பி.வி.கே. பிரபு திருச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். உடன் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கழக செய்தித் தொடர்புக்குழு துணைத் தலைவர் மருது அழகுராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

# நம்முடைய மண்ணின் சிந்தனைகளும் எழுத்துகளும் உலகம் முழுக்க பரவ வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

**தமிழ்நாட்டைப் பண்படுத்தியது திராவிட இயக்கம்!**

நம்முடைய திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த, சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த, பிற்போக்குத்தனங்களை எதிர்க்கின்ற, சமூகநீதிப் பார்வை கொண்ட, ஒரு பெண் எழுத்தாளரின் வருகையால் நம்முடைய புத்தகத் திருவிழா இன்றைக்கு மிகுந்த சிறப்படைந்திருக்கிறது! எதையும் கேள்விகேட்டு, விமர்சனப்பார்வையுடன் அணுகி, பழமைகளைப் பொசுக்கிய திராவிட இயக்கம் தமிழ்நாட்டை பண்படுத்தியது! அதேபோல, கர்நாடகத்தில், கன்னட புரட்சி இலக்கிய மரபில் இயங்கி வருகின்ற பானு முஷ்டாக் அவர்கள், நம்முடைய அழைப்பை ஏற்று வருகை தந்தமைக்காக என்னுடைய நன்றியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

ஜெர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அமீரகம் -இப்படி, உலகத்தின் பல பகுதிகளில், இது போன்ற பன்னாட்டு புத்தகத் திருவிழாக்கள் நடை பெறுகின்ற செய்திகளை நான் பார்ப்பதுண்டு. அப்போதெல்லாம் இப்படிப்பட்ட முன்னெடுப்பு கள், தமிழ்நாட்டிலும் நடைபெற வேண்டும் என்று நான் நினைப்பேன்! அந்த எண்ணத்தை இப்போது நம்முடைய திராவிட மாடல் அரசில் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்!

**புத்தகத் திருவிழாவில் பல பொருட்களில் உரையாடல்கள்!**

இந்தப் புத்தகத் திருவிழாவில், நிறைய அறிவார்ந்த, இக்காலத்துக்கு அவசியமான உரையாடல்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருப் பதைப் பார்த்து நான் பெருமைப்பட்டேன். அதை பொதுமக்களிடமும் பகிர்ந்து கொண்டு,

## ‘சாகித்ய அகாதெமி’ விருதில் கூட அரசியல் குறுக்கீடு!

அவர்களை இந்தப் புத்தகத் திருவிழாவை நோக்கி அழைத்துக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் - “ஏ.ஐ. - அலாவுதீன் அற்புத விளக்கா? டிரோஜன் குதிரையா?” - “புத்தகங்களின் எதிர்காலம் குறித்த பிரெஞ்சு பார்வை”- “ஒடுக்கப்பட்ட மக்களின் இலக்கியம்”- “மொழிபெயர்ப்பாளர், மொழிபெயர்ப்பு சார்ந்த சவால்கள்” - “ரீல்ஸ் யுகத்தில் இலக்கியம் கவனம் பெறுவதில் உள்ள சவால்கள்” - “பெண் இலக்கியம்சார் சவால்கள்“ -இப்படி சுவாரசியமான பல பொருட்களில் உள்ள உரையாடல்கள் நடத்துகிறீர்கள் என்று என்னுடைய சமூக வலைத்தளப் பக்கங்களிலும் ‘ஷேர்’ செய்தேன்! அதுவும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆளுமைகளின், இந்திய, வெளிநாட்டு ஆளுமைகளும் சேர்ந்து பேசியது, ஒரு பரந்து விரிந்த பார்வையை எல்லோருக்கும் வழங்கியிருக்கும் என்று நான் நம்புகிறேன்.

நம்முடைய மண்ணின் சிந்தனைகளும், எழுத்துகளும்உலகம்முழுக்கப்பரவவேண்டும்; உலகின் உயரிய சிந்தனைகள் நம்முடைய மக்களிடம் வந்தடைய வேண்டும் என்ற கனவு இந்த நிகழ்ச்சியால் நனவாகியிருக்கிறது! மொத்தத்தில் இப்படியொரு அறிவுச் சங்கமத்தை வெற்றிகரமாக நடத்தியிருக்கின்ற நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் என்னுடைய அருமைத் தம்பி அன்பில் மகேஸ் அவர்களுக்கும், செயலாளர் திரு.சந்தர மோகன், இ.ஆ.ப., அவர்களுக்கும், பொதுநூலக இயக்ககத்திற்கும், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திற்கும், பன்னாட்டு ஒருங்கிணைப்பாளர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

அமைச்சர் அன்பில் மகேஸ் அவர்களைப் பற்றி நான் சொல்ல வேண்டும் என்றால், பள்ளிக்கல்வித் துறை என்கிற மிகப் பெரிய பொறுப்பு அவருக்கு ஒப்படைக்கப்பட்டதில் இருந்து, அதற்கேற்ப தன்னைத் தயார்படுத்திக் கொண்டு உழைத்துக் கொண்டு வருகிறார். இன்னும் சொல்லவேண்டும் என்றால், அவரே ஒரு டீச்சர் போல ஆகிவிட்டார். டீச்சர் போல மட்டுமல்ல, தொடர்ந்து கற்கும் மாணவராகவும் இருந்து முனைவர் பட்டம் பெற்று மாணவர்களுக்கு ஒரு நல்ல ரோல்மாடலாக இன்றைக்கு அவர் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

இங்கே அவர் பேசும்போது சொன்னார், நான்கு ஆண்டுகளில், சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவை உலக அளவிலான பதிப்புரிமைப் பரிமாற்ற மையமாக உருவெடுத்தி ருப்பதை நமக்குக் கிடைத்திருக் கக்கூடிய மிகப்பெரிய வெற்றியாக நான் பார்க்கிறேன்.

இன்று, நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பதிப்பாளர்கள் இங்கே குழுமியிருப்பது, சென்னை பன்னாட்டு அறிவு மையமாக உயர்ந்து வருவதை உறுதிப்படுத்துகிறது.

இலக்கியத்திற்கு எல்லைகள் கிடையாது! திருவள்ளுவரின் அறமும், இளங்கோ அடிகளின் காப்பியமும், பாரதியின் கவிதைகளும், பாரதிதாசனின் கருத்துக்களும் உலகமெல்லாம் ஒலிக்கவேண்டும்.

**நூற்றுக்கணக்கான நூல்கள் மொழிபெயர்ப்பு!**

அதே வேளையில், உலகத்தரம் வாய்ந்த அறிவியல் மற்றும் இலக்கியப் படைப்புகள், எளிய தமிழில், நம்முடைய கிராமத்து மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும். இதற்காகவே நம்முடைய அரசு, ‘தமிழ்நாடு மொழிபெயர்ப்பு முகமை’ மூலம் பல கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்து, கடந்த 3 ஆண்டுகளில், நூற்றுக்கணக்கான நூல்கள் இதன் மூலமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

### மாணவர்களுக்கு ரோல்மாடலாகத் திகழும் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி!



**அமைச்சர் அன்பில் மகேஸ் அவர்களைப் பற்றி நான் சொல்ல வேண்டும் என்றால், பள்ளிக்கல்வித் துறை என்கிற மிகப் பெரிய பொறுப்பு அவருக்கு ஒப்படைக்கப்பட்டதில் இருந்து, அதற்கேற்ப தன்னை தயார்படுத்திக் கொண்டு உழைத்துக் கொண்டு வருகிறார். இன்னும் சொல்லவேண்டும் என்றால், அவரே ஒரு டீச்சர் போல ஆகிவிட்டார். டீச்சர் போல மட்டுமல்ல, தொடர்ந்து கற்கும் மாணவராகவும் இருந்து முனைவர் பட்டம் பெற்று மாணவர்களுக்கு ஒரு நல்ல ரோல்மாடலாக இன்றைக்கு அவர் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.**

இந்தப் புத்தகத் திருவிழாவில் நடைபெறும் ‘பதிப்புரிமைப் பரிமாற்றம்’ வெறும் வணிகம் கிடையாது; இரு மொழிகளுக்கு இடையே நடைபெறுகின்ற பண்பாட்டுக் கைக்குலுக்கல்! செம்மொழியான தமிழின் சங்க இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை உலக மக்களுக்குச் சென்று சேரவேண்டும்! இந்த நிலப்பரப்பிலிருந்து எவ்வளவு ஆழமான, பரந்த சிந்தனை கொண்ட கருத்துக்கள், இலக்கிய, இலக்கண மரபுகள் உருவாகியிருக்கிறது என்று நாம் உணர்த்த வேண்டும்!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மூலமாக, சிறந்த தமிழ்ப் படைப்புகளை ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன் மற்றும் ஸ்பானிஷ் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட மொழிகளில், மொழிபெயர்க்க நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். A.I. கோலோச்சும் இந்தக் காலத்தில், புத்தகங்களையும், நவீனத் தொழில்நுட்பத்தையும் இணைக்க வேண்டிய அவசியத்தையும் எடுத்துகாட்டுவதாக இந்த அரங்கம் சிறப்பாக அமைந்திருக்கிறது.

**அறிவைப் பகிர்ந்துகொள்ளும் சிறந்த மாநிலம் தமிழ்நாடு!**

இங்கே வந்திருக்கின்ற உலகப் பிரதிநிதி களுக்கு நான் ஒரு செய்தியை அழுத்தமாக சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு என்பது நீங்கள் தொழில் முதலீடு செய்ய மட்டும் உகந்த மாநிலம் இல்லை; அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கும் மிகச் சிறந்த மாநிலம். கீழடி முதல் பொருநை வரை கண்டெடுத்த தொல்லியல் சான்றுகளைப் பாருங்கள்; தமிழ்ச் சமூகத்தின் அறிவு மரபு எப்படிப்பட்டது என்பது அப்போது புரியும்!

உலக நாடுகளின் சிறந்த படைப்புகளைத் தமிழில் கொண்டு வாருங்கள்; அதேபோல, மனிதநேயத்தையும், சமூகநீதியையும் பேசுகின்ற எங்கள் திராவிடக் கருத்தியல் இலக்கியங்களையும் உங்கள் நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்துங்கள்; எழுத்தாளர்கள் உலகை வெல்வதை பெருமிதத்தோடு எதிர்நோக்கி அனைவரும் காத்திருப்போம்.

**உலக மக்களை இணைக்கும் பாலம்தான் மொழி!**

மொழி என்பது பிரிக்கக்கூடிய சுவர் இல்லை, அது உலக மக்களை இணைக்கும் பாலம். புத்தகங்கள் வெறும் பேப்பர் கிடையாது! அவை

## உலக நாடுகளின் சிறந்த படைப்புகளைத் தமிழில் கொண்டு வாருங்கள்!

ஒரு தலைமுறை, மற்றொரு தலைமுறைக்கு விட்டுச் செல்லும் அறிவுச் சொத்து.

எனது அன்பிற்குரிய மாணவர்களே, இளைஞர்களே! ஒரு புத்தகத்தைத் திறப்பவர், உலகத்தின் ஜன்னலைத் திறக்கிறார். ஒரு புத்தகத்தை வாசிப்பவர், ஆயிரம் மனிதர்களின் வாழ்க்கையை வாழ்கிறார். நீங்கள் வாசிக்கின்ற ஒவ்வொரு பக்கமும் உங்கள் தன்னம் பிக்கையை வளர்க்கும். அறிவார்ந்த சமூகத்தைப் படைப்போம்! ‘உலகை தமிழுக்கும், தமிழை உலகுக்கும் கொண்டு சேர்ப்போம்’ என்று சொல்வோம்.

**கலை இலக்கிய விருதுகளில் கூடவா அரசியல்!**

என்னுடைய உரையை நிறைவு செய்வதற்கு முன்பு, சில நாட்களுக்கு முன்பு, மனதுக்கு நெருடலாக ஒரு செய்தி தலைநகர் தில்லியில் இருந்து வந்தது. உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்கும். 2025-ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமி விருதுகள் இறுதி செய்யப்பட்டு, அறிவிக்கப்பட இருந்த நிலையில், ஒன்றிய அரசின் கலாச்சாரத் துறை தலை யீட்டால், விருது அறிவிக்கும் நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இனி, அது நடக்குமா? என்றும் தெரியவில்லை. கலை இலக்கிய விருதுகளில் கூட அரசியல் குறுக்கீடு கள் செய்வது ஆபத்தானது. இப்படி ஒரு சூழலில், தமிழ்நாடு அரசு ஆக்கப்பூர்வமான, உரிய எதிர்வினையை ஆற்றவேண்டும் என்று, பல்வேறு எழுத்தாளர்களும், கலை இலக்கிய அமைப்புகளைச் சார்ந்தோரும் என்னிடம் கோரிக்கை விடுத்திருந்தார்கள். இது, காலத்தின் தேவை என்று நாங்களும் உணர்ந்தே இருக்கி றோம்.

**தலைசிறந்த படைப்புகளுக்கு செம்மொழி இலக்கிய விருது!**

அதன்படி, உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கின்ற ஒரு அறிவிப்பை இந்த மேடையில் வெளியிட விரும்புகிறேன்.

**“குறிப்பிட்ட இந்திய மொழிகளில் வெளி யாகின்ற, தலைசிறந்த இலக்கியப் படைப்புகளுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில், ஆண்டுதோறும் தேசிய அளவிலான விருதுகள் வழங்கப்படும்”. இதனை அறிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முதல்கட்டமாக, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா, வங்காளம் மற்றும் மராட்டிய மொழிகளில் வெளியாகின்ற தலைசிறந்த படைப்புகளுக்கு ஆண்டுதோறும் “செம்மொழி இலக்கிய விருது” என்ற பெயரில் அந்த விருது வழங்கப்படும். விருதுடன், தலா 5 இலட்சம் ரூபாய் பரிசுத்தொகையும் வழங்கப்படும்.**

**படைப்புகளின் இலக்கியத் தரத்தையும், வெளிப்படையான தேர்வு முறையையும் உறுதி செய்யும் விதமாக புகழ்பெற்ற எழுத்தாளர்கள், விருதாளர்கள் அடங்கிய குழு ஒவ்வொரு மொழிக்கும் தனியே அமைக்கப்படும். புரவலர் பணியை தமிழ்நாடு அரசு மனநிறைவோடு மேற்கொள்ளும்.**

அடுத்து அமையப்போவதும் திராவிட மாடல் 2.0 ஆட்சிதான்! அப்போது, இதைவிடப் பெரிய அளவில், உலகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில், இந்தப் பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவை நடத்துவோம்! தமிழ்நாடு முழுவதும் மேலும் பல பிரமாண்ட நூலகங்களை அறிவுக் கோயில்களாக எழுப்புவோம்! அறிவுத்தீ வளர்ப்போம்! வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## கும்பகோணம் மாநகர தி.மு.க. சார்பில்

# காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு நூல் அறிமுக விழா !

## சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. – தமிழ் கேள்வி செந்தில்வேல் சிறப்புரை!

*தஞ்சாவூர், ஜன.20-*

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர தி.மு.க. சார்பில் திராவிடப் பொங்கல் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் காலத்தின் நிறம் கருப்பு சிகப்பு நூல் அறிமுக நிகழ்ச்சி கும்பகோணம் மூர்த்தி அரங்கில் நடைபெற்றது.

மாநகர கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன் தலைமையில் நடைபெற்ற விழாவில். மாநகரக் கழக துணை செயலாளர் ப்ரியம் ஜெ. சசிதரன் வரவேற்புரையாற்றினார், மாநகரக் கழக நிர்வாகிகள் எஸ்.வாசுதேவன், எஸ்.ரவிச்சந்திரன், எம்.சிவானந்தம், டி.செந்தாமரை, பகுதி செயலாளர்கள் இரா. செல்வராஜ், இரா.கல்யாண சுந்தரம், டி.வி.கிருஷ்ண மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்

இந்நிகழ்வில் “இலட்சிய இருவர்ண கொடியேந்தி வா” என்ற தலைப்பில் இளம் பேச்சாளர் திருவாரூர் கனிமொழியும், “தோளில் துண்டு அணிந்து வா” என்ற தலைப்பில் இளம் பேச்சாளர் சொல்லருவி தீன்ஷா நூப், “காலில் செருப்பு அணிந்து வா” என்ற தலைப்பில் இளம் பேச்சாளர் வழக்கறிஞர் மோகன் நிதி ஆகியோர் உரையாற்றினார்கள்.

அதனைத் தொடர்ந்து தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. திராவிட பொங்கல் விழா பற்றி எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து மூத்த ஊடகவியலாளர் தமிழ் கேள்வி தி.செந்தில்வேல் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றினார்.

பின்னர் விழாவில் கலந்து கொண்ட ஆயிரம் மகளிருக்கு பொங்கல் பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்வின் போது விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு நினைவு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.


இந்நிகழ்வில் முன்னாள் எம்.பி. செ.இராமலிங்கம், மாநில இளைஞரணி துணை செயலாளர் ந.இளைய ராஜா, மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி.அய்யாராசு, எஸ்.நடராஜன், ந. ஜெயலெட்சுமி, ஒன்றிய செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், ஜெ.சுதாகர், பொதுக்குழு உறுப்பினர்கள் எல்.இராஜேந்திரன், மண்டலக்குழு தலைவர்கள் ஜெ.மனோகரன், பாபு (எ) இராம.நரசிம்மன், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆடுதுறை மு. உத்திராபதி, மாநகராட்சி நிலைக்குழு தலைவர்கள் சா.பார்த்திபன், டி.ஆர். அனந்தராமன், ஆர்.முருகன், சோடா .இரா.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட திட்டக் குழு உறுப்பினர் அ.சாகுல் ஹமீது, பேரூர் கழகச் செயலாளர்கள், மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் மாவட்ட, மாநகர, பகுதி மற்றும் வட்ட சார்பு அணி நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். விழா முடிவில் பகுதிச் செயலாளர் மு.கண்ணன் நன்றியுரை யாற்றினார்.

---

## மாயா பஜார்

ஓடாத படத்துக்கு “நூறாவது நாள்”
கொண்டாடும்
அதே சினிமா
வித்தையை
அதே
விளம்பர யுக்தியை

தேர்தலையே சந்திக்காத
தனது நடை வண்டி கட்சியின்
அரசியலுக்கும்
பின்பற்றுகிறவரின்
மாயஜாலத்திற்கு
அறிவார்ந்த
தமிழகம் சித்திரையில்
புத்தி புகட்டக் காத்திருக்கிறது.






**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக்
குழுத் துணைத் தலைவர்